# வேர்கள்

# ROOTS

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்

LONDON TAMIL CATHOLIC QUARTERLY

LONDON TAMIL CATHOLIC CHAPLAINCY, 304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,
E-Mail: Verkalgb@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257

வேர் - 3 கிளை - 6 06.05.2018 விலை : £1



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org











புதிய அருட்தந்தையின் முதலாவது திருப்பலி வரவேற்பின் போது - Earlsfield







Southend Mass Centre



Plam Sunday 2018 Aylesford



Kenton Mass Cetre

## பணியக நிகழ்வின் நிழல்கள்
















ஒளிவிழா வேதாகம போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தற்போதைய இந்திய மாநிலம் கோவா. அந்நாளில் போர்த்துகீசிய பேரரசின்கீழ் இருந்தது. புனிதர் ஜோசப் வாஸ், போர்ச்சுகீசிய இந்தியா என்றழைக்கப்பட்ட பகுதியான கோவாவின் 'பெனோலிம்' என்னுமிடத்தில் ஏப்ரல் 21, 1651ஆம் ஆண்டு தமது பெற்றோருக்கு பிறந்த ஆறு குழந்தைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர். இவரது தந்தை 'கிறிஸ்டோவாவோ வாஸ்' (Cristóvão Vaz) தாயார் 'மரியா டே மிராண்டாவும்' (Maria de Miranda) கத்தோலிக்க விசுவாசமிக்கவர்கள் ஆவர்.

தமது சிறுவயதில் போர்த்துக்கேய மொழியில் கல்விகற்ற இவர், சிறந்த மாணவராகத் திகழ்ந்ததால் ஆசிரியர்களாலும் சக மாணவர்களாலும் மதிக்கப்பட்டார். மேல்படிப்புக்காக கோவா நகர் அனுப்பப்பட்ட வாஸ், புனித பவுலின் இயேசு சபை கல்லூரியில் (Jesuit college of St. Paul) சேர்ந்து 'சொல்லாட்சி' மற்றும் 'மனிதநேயம்' (Rhetoric and Humanities) ஆகிய பாடங்களில் பட்டம் பெற்றார். மேலும், கோவா நகரின் டோமினிக்கன் சபையினரின் 'புனித தோமஸ் அக்குயினாஸ்' கல்லூரியில் சேர்ந்து (St. Thomas Aquinas' Academy of the Dominicans) தத்துவ ஞான சாஸ்திரம் மற்றும் இறையியல் கற்று தேர்ந்தார்.

1675ல், கோவா உயர் மறைமாவட்டத்தில் திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்பட்டார். அடுத்த ஒரு வருடத்தில் கோவா உயர் மறைமாவட்ட பேராயரால் குருத்துவ அருட்பொழிவு செய்யப்பட்டார். குருத்துவம் பெற்ற உடனேயே அனுபவமிக்க மறைப் பணியாளர்கள் போல நடைபயணமாகவே பல ஊர்களுக்கு பயணித்து மறை போதனை செய்ய ஆரம்பித்தார். குரு மாணவர்களுக்காக "சேன்கோல்" (Sancoale) என்ற இடத்தில் ஒரு இலத்தீன் மொழி பள்ளியைத் நிறுவினார். 1677ல் தம்மைத் தாமே "மரியாவின் அடிமை" ("Slave of Mary") என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். அதனை ஒரு உயிலாக பாவித்து சீலிட்ட உரையில் (Deed of Bondage), வைத்து பாதுகாத்தார்.

அந்நாளில், இலங்கையை ஆண்ட போர்ச்சுகீசியர்கள் (Portuguese) நாட்டை 'டச்சு' (Dutch) நாட்டவரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறினர். நாட்டை ஆளத் தொடங்கிய டச்சு நாட்டவர், தமது மத விசுவாசமான "கால்வினசம்" (Calvinism) சபையை, ஏற்றுக்கொள்ள மக்களை வற்புறுத்தினர்.

("கால்வினசம்" (Calvinism) என்பது, 'John Calvin' என்பவரால் கத்தோலிக்கத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட இறையியல் அமைப்பாகும். இது லூத்தரன் கோட்பாட்டை உள்ளடக்கியதாகும்.)

இந்தியாவின் கோவாவில் பிறந்த புனிதர் ஜோசப் வாஸ், இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் டச்சுக்காரர்களால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில், இலங்கை வாழ் கத்தோலிக்கருக்கு சேவை செய்வதற்காக இலங்கை வந்தார். இவர் இலங்கையின் வடக்குப் பிராந்தியங்களில் "யோசேவாஸ் முனீந்திரர்" எனவும் அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் இவர் கண்டி இராச்சியத்தில் தங்கியிருந்து இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையை மீளமைத்தார்.

**யாழ்ப்பாண வருகை :**

1687ம் ஆண்டு ஏப்ரலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அப்போது இலங்கையில் ஆட்சியில் இருந்த டச்சுக்காரர்கள் கால்வினிசத்தைப் (Calvinism) பின்பற்றியவர்கள். எனவே கத்தோலிக்கரையும், குருமாரையும் கொலை செய்தனர். பள்ளிகளைத் தரைமட்டமாக்கினர். இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்கு சில்லாலையூர் மக்கள் புகலிடம் வழங்கினர். அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு சேவையாற்றினார். பின்னர் அவர் மாறுவேடத்தில் நடை பயணமாக 24 ஆண்டுகளாகப் வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று மறைபோதகம் செய்தார்.

**கண்டி விஜயம் :**

1692ல் கண்டிக்குச் சென்ற வாஸ் அடிகளார், அங்கு ரோமன் கத்தாலிக்க விசுவாசத்தை மீண்டும் ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்தார். இதனால் அவர் அங்கு இரண்டாண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது. கண்டியிலிருந்தே தனது சேவையைத் தொடர்ந்த வாஸ் அடிகள் 1696ல் இலங்கையின் (Vicar - General) பதவியைப் பெற்றார். 1710ம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளி பரிசுத்த வியாகுலமாதா ஆலய வளவில் சிறு ஓலைக் கோயில் கட்டித் திருப்பலி ஒப்புக் கொடுக்கும்போது காட்டிக் கொடுக்கப்பட்டு மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார்.

வாஸ் அடிகளார் இலங்கை நாட்டில் தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் திருவிவிலியத்தை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் மொழி பெயர்த்தார். அவ்விரு மொழிகளிலும் மக்கள் கடவுளை வழிபடுவதற்கான நூல்களையும் இயற்றினார்.

மடு நகரில் அமைந்துள்ள அன்னை மரியாள் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு வாஸ் அடிகளார் துணைபுரிந்தார். மேலும், கிறிஸ்தவ விசுவாசத்தை இலங்கையில் பரப்புவதில் அந்நாட்டு மக்களின் பண்பாட்டுப் பாணிகளை மதிக்க வேண்டும் என்பதிலும் அவர் கவனமாயிருந்தார். மொழி, இன வேறுபாடுகளைக் களைந்து, கடவுள் நம்பிக்கையில் மக்கள் வளர வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருந்தது. கத்தோலிக்கர்களுக்கு இவர் ஆற்றிய அரும் பணிகளுக்காக இவர் இலங்கையின் திருத் தூதர் என அழைக்கப்பட்டார்.

1995 ஜனவரி 21ம் நாள் கொழும்பு நகரில் இவருக்கு திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல், அருளாளர் பட்டம் வழங்கினார்.

2015 ஜனவரி 14 அன்று கொழும்பு நகரில், காலிமுகத் திடலில் வைத்து, திருத்தந்தை பிரான்சிஸ், இவரை புனிதராகத் திருநிலைப் படுத்தினார்.

வழக்கமாக புனிதர் பட்டமளிப்புக்கு தேவைப் படும் இரண்டாம் புதுமையினை வேண்டாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ், வாஸ் அடிகளாருக்கு விதிவிலக்கு அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் புனிதர் பட்டம் பெற்ற முதல் புனிதர் இவரேயாவார். இந்த நிகழ்வில் திருத்தந்தையிடம் ஆசிர் பெறுவதற்காக 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். இவரின் நினைவுத் திருவிழா 16 ஜனவரி ஆகும் ●

Source : http://radio veritas tamil.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேர்ச்சஞ்சிகைக்கான ஆக்கங்களும், ஆக்கபூர்வமான விமர்சனங்களும்!**

அன்பான உறவுகளே. உங்களின் ஆக்கங்களையும். ஆக்கபூர்வமான ஆழமான அனைத்துக் கருத்துக்களையும். எழுதி வெளியிட. வேர்ச் சஞ்சிகைக் குழுவினர் களம் அமைத்துத் தந்துள்ளனர். சமூகத்தில் மாற்றங்களை மாற்று வதற்காக. நாம் ஒவ்வொரும் மாற. எங்கள் சாளரங்கள் எப்போதுமே. உங்களுக்காகத் திறந்தே வைக்கப்பட்டுள்ளது. உங்களின் ஆக்கபூர்வமான சிந்தனைத் துளிகள் வேர்ச் சஞ்சிகையின் தரத்தை உயர்த்தி. வாழ்வோடு வழிபாடு பின்னிப் பிணைந்து. பயணிக்க. வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றவே. இச் சஞ்சிகையானது உருவாக்கப்பட்டது. இதற்காகவே இச்சஞ்சிகையானது எமது பங்குத்தந்தை செபமாலை செபநேசரட்ணத்தால் சமூகமாகிய. எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது எனவே உயரிய குறிக்கோளுக்கேற்ப.இந்த உயரிய ஒரே குறிக்கோள் ஒளி வீச. ஒவ்வொரு நானும் உழைப்போம்என உறுதி எடுப்போம்.

**தொடர்புகளுக்கு : ஆசிரியர் கபிரியேல் நிமலன் - 0790998336**
**உதவி ஆசிரியர் திரேஸ் மரியதாஸ் - 07818651154**

**வேர்ச் சஞ்சிகையின் நிர்வாகக் குழுவினர்:**

- இயக்குனர் - அருட்பணியாளர் Elmo Arulnesan - +44(0) 7484354862
- ஆசிரியர் - கபிரியேற்பிள்ளை நிமலன் - +44(0) 790998336
- உதவி ஆசிரியர் - திரேஸ் மரியதாஸ் - +44(0) 7818651154
- ஆலோசகர் - அருட்பணியாளர் செபமாலை செபநேசரட்ணம் - +44(0) 7956460418

**ஊடகத் தொடர்பாடர்கள்:**

- அமிர் லூயிஸ் - வொளிங்ரன் - +44(0) 7590012123
- திருமதி மேரி லக்ஸ்னா பெர்ணாந்து - சவுத்தோல் +44(0) 7488464847
- திரு.விக்ரர் சிவகுணம் - சிங்வோட் - +44(0) 7854556432

## எமது தற்போதைய தாயக நான்கு மறைமாவட்ட ஆயர்கள்

**யாழ்ப்பாணம் பரிபாலகர்**



மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம்

**மன்னார் பரிபாலகர்**



மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை

**மட்டக்களப்பு பரிபாலகர்**



மேதகு யோசவ் பொன்னையா

**திரிகோணமலை பரிபாலகர்**



மேதகு நோயல் இம்மானுவேல்

## இளையோர் உதவி மறை ஆசிரியர்கள்

இளையோர் இன்று விசுவாச வாழ்வைக் கேள்விக்குறியாக்கி விஞ்ஞானத்திற்கு அடிமையாகி. அதிலே மூழ்கியுள்ளார்கள். இவ்வாறான சூழலில் கடந்த இரண்டு வருடங்களாக இளையோர் மறைக்கல்வியைக் கற்பிக்கப் பழக்கியிருந்தோம். இவ் இளையோர் மிக மிகச் சிறப்பாகக் கற்பிக்க பழகி விட்டதுடன் இளைய மறை ஆசிரியர்களாகவே மாறிவிட்டார்கள். இச் செயற்பாடானது அனைத்து இளையோருக்கும் எடுத்துக்காட்டாகவும். மகிழ்ச்சியாகவும் காணப்படுகிறது. அத்துடன் மறை ஆசிரியராக எனக்கும் மனநிறைவைத் தந்துள்ளது. சிறப்பாக மனுவேலா. ஜெமிசன். அனிசா. அன்ரனீற்றா. மெல்வின் இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அத்துடன் மிகவும் அர்ப்பணிப்புடன் எனக்கு உதவிய அலோசியஸ் லூயிஸ் இற்கு எனது மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

இளையோரை வழிபாடுகளில். சிறப்பாகத் தமிழ் வழிபாடுகளில் இணைக்க வேண்டிய புலம்பெயர் சூழ்நிலையில் நாம் வாழ்கின்றோம். அந்த வகையில் என்னுடன் கைகோர்த்துப் பணிபுரிந்த அனைவருக்கும் தொடர்பாடர்க்கும் எல்லாவற்றிலும் உறுதுணையாக இருந்த குருவானவருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும் நன்றி. இளையோர் மென்மேலும் தமிழ் வழிபாடுகளில் அடுத்தபடியை எடுத்துவைக்க அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட ஆண்டவர் அருள்புரிவாராக. Thires Mariathas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்னை மரியாளின் தாழ்ச்சி இன்று எம் குடும்பங்களில்

திருக்குடும்பம் என்பது சமத்துவம் அன்பு மதிப்பு மரியாதை போன்ற நற்பண்புகளால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அழகிய பூந்தோட்டம். அப் பூந்தோட்ட வாழ்வு பல ஆண்டுகளுக்குமுன் எம் தாயாம் அன்னை மரியாவும் யோசேப்பும் இயேசுவும் இணைந்து ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்து காட்டியுள்ளனர். அவர்கள் ஒருவர் மீது மற்றவர் ஆதிக்கம் செலுத்தவில்லை மாறாக ஒருவர் மற்றவர்களை மதித்து அன்புக்கு அடிமையானார்கள். அவர்கள் மற்றவர்களை சொல்லாலோ செயலாலோ புண்படுத்தவில்லை அவர்களிடம் விட்டுக்கொடுக்கும் பண்பு காணப்பட்டதால் எந்தவித பிரச்சினைகளும் தோன்றவில்லை. கடவுள் வாழ்ந்த அக்குடும்பத்தில் அறிவுக்கு எட்டாத அமைதி நிலவியது.

இன்று உலகில் நடக்கும் பல போர்களுக்கும் சண்டைகளுக்கும் காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள். உண்ண உணவில்லை என்றா? உடுத்த உடை இல்லை என்றா? அல்லது இருக்க உறைவிடம் இல்லை என்றா? இல்லை மாறாக நான் பெரியவனா நீ பெரியவனா என்ற அதிகாரப் போட்டியினாலும் ஒருவருக்கு ஒருவர் தாழ்ந்து போகும் தன்மை இல்லாததினாலும் விட்டு கொடுக்கும் மனம் நம்மிடையே இல்லாததினாலும் தான் இந் நிலை எமக்கு ஏற்படுகின்றது.

ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமை படுத்துகின்றது ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையை கண்ணோக்கினார் (லூக் 1:46).

இறைவன் மரியாளின் கன்னிமையைக் கண்ணோக்கினார் என்று கூறாமல் அவர்தம் தாழ்ச்சியை கண்ணோக்கினார் என்று கூறலாம். மரியாளிடம் அதிதூதர் கபிரியேல் மங்கள வார்த்தை கூறிய போதும் கூட அவளது பதில் 'நான் ஆண்டவரின் அடிமை' என்று தம்மை தாழ்த்தியதால் தான் இறைவன் அவரை மீட்பரின் தாயாக உயர்த்தினார்.

இன்று எம் குடும்பங்களின் எம் தாழ்ச்சி நிலைதான் என்ன? அகிலத்தின் தாயிடம் காணப்பட்ட தாழ்ச்சியாவது எம்மவர்களிடம் காணப்பட வேண்டும் அல்லவா? சிறியவர்களை விட பெரியவர்களிடமே தாழ்ச்சியின் நிலை கவலைக்கிடமாகி விட்டது. உதாரணமாக நம் மத்தியில் சண்டை மனத்தாங்கல் பிரச்சினை நடந்து கொண்டேதான் இருக்கின்றது. அதாவது நான் தான் மூத்த பிள்ளை வீட்டின் எல்லா நிகழ்விலும் எனக்கு முதலிடம் செலுத்த வேண்டும் என எண்ணும் போதும். எனக்கு அக்கா நீயாக இருக்கலாம் ஆனால் நான் சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கின்றேன் அதனால் என்னை நீ மதிக்க வேண்டும் என்று எதிர் பார்க்கும் போதும் எமது தாழ்ச்சியின் நிலைதான் என்ன?

இவை அனைத்துமே உலகம் எம்மை தீய நாட்டத்தில் தள்ளிவிடும் செயல்களின் அறிகுறி தான். இதை நாம் அறியாது நாம் செய்வது சரி என எண்ணி நாம் செயற்படுகின்றோம். இதனால் தான் உண்மையான அன்பு. சகோதர பாசம். தாய் - பிள்ளை உறவு. இழந்து தவித்துக் கொண்டு இருக்கின்றோம் பரலோகம் செல்லும் வழியை அன்னை மரியாள் தாழ்ச்சியின் மூலம் செல்லலாம் என கற்றுத் தந்தது மட்டுமல்லாது தம் வாழ்வில் வாழ்ந்தும் காட்டியுள்ளார். இதற்கு மேல் நமக்கு என்ன வேண்டும்.

சின்ன சின்ன விசயங்களில் நாம் தான் பொறுமையை கைக் கொள்ள வேண்டும். சிறியவர்களே! பெரியோர்கள் நம்மை திட்டினாலோ நமக்கு புத்திமதி சொன்னாலோ அதை பொறுமையாக கேட்டு நடப்பதே நல்ல செயல். அதை உதாசீனம் செய்ய கூடாது. அதேபோல் பெரியவர்களே! நீங்கள் எவ்வளவு துரம் தாழ்மையோடு சிறுவர்கள் முன்னும் உங்கள் வயதுள்ள மற்றவர்களோடும் பெரியவர்களோடும் நடந்து கொள்கின்றீர்களோ அது உங்கள் சந்ததிக்கும் உங்கள் அடுத்த சந்ததிக்கும் பயனுள்ளதாய் அமையும்.

அன்னை மரியாள் தன்னை எவ்வளவு தூரம் தாழ்த்த இயலுமோ அவ்வளவு தூரம் தம்மை தாழ்த்தி இறை வனின் அன்னை யாகின் றாள். அதேபோல நாமும் அன்னை மரியாளிடம் காணப்பட்ட தாழ்ச்சிகளை எமது வாழ்வில் கடைப்பிடிக்க வரம் வேண்டுவோம். நமது உள்ளத்தில் தாழ்ச்சி என்னும் புதுமலர் மலர வேண்டுமென்றால் சக்கேயு மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்தது போல நாமும் நமது ஆணவம் பணம் பதவி பட்டம் ஆகியவற்றிலிருந்து கீழே இறங்கி வர வேண்டும் அதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா?

ஆணவத்தினால் பிரிந்து வாழும் குடும்பங்களும் தனி நபர்களும் தாழ்ச்சியின் வழியாக மீண்டும் ஒன்று சேர வேண்டும். 'பெத்தலேகேமில் இயேசு பிறந்த இடத்தை பார்வையிட வேண்டுமென்றால் தலைகுனிந்தே அவ்விடத்தை பார்வையிட வேண்டும். இதன் வெளிபாடு என்ன வென்றால் தம்மை தாழ்த்தாத எவரும் கடவுளிடம் அணுக முடியாது குழந்தை இயேசுவிடமிருந்து "கனிவையும் மனத்தாழ்மையையும் கற்றுக் கொள்வோம். மத் 11:29

எனவே அன்னை மரியாளிடம் காணப்பட்ட பொறுமை தாழ்ச்சி எளிமை போன்ற நற்குணங்கள் எம் குடும்பங்களில் மிளிர தொடர்ந்து அன்னையின் வழியில் நடப்போம் இறையருள் பெறுவோம்.

**- Q.F.Laxthana Fernando**
**மறையாசிரியர்**

## *Cathedrals of the Roman Catholic Church in Sri Lanka*

- St. Joseph's Cathedral in Anuradhapura
- St. Mary's Cathedral in Badulla
- St. Mary's Cathedral, Batticaloa
- St. Mary's Cathedral in Chilaw
- St. Lucia's Cathedral, Colombo
- St. Mary's Cathedral, Galle
- St. Mary's Cathedral, Jaffna
- St. Anthony's Cathedral in Kandy
- St. Anne's Cathedral in Kurunegala
- St. Sebastian's Cathedral, Mannar
- Cathedral of Sts. Peter and Paul in Ratnapura
- St. Mary's Cathedral in Trincomalee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் ஐக்கிய இராட்சியம்

**"பிறப்பினால் எவர்க்கும் - பெருமை வராதப்பா சிறப்பு வேண்டுமெனில் - நல்ல செய்கை வேண்டுமப்பா"**

என்ற கம்பதாசனின் வரிகளுக்கு உயிரோட்டம் கொடுப்போம். உயிர் வாழ்வது என்பது எத்தனை வருடங்களோ வயதுகளோ என்பதோ அல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பதிலே தான் வாழ்வின் அர்த்தமும் வெற்றியும் தங்கியுள்ளது. அந்த வகையில் பற்பல நெருக்கடிக்குள்ளும் தமது பணியின் முதன்மையை உணர்ந்து. தாயக மக்களுக்காக மடிப்பிச்சை ஏந்திப் பணிபுரிகிறது தமிழ் கத்தோலிக்க ஒன்றியம். இவர்களுடன் கைகோர்த்துப் பயணிப்பது எமது கடமையும் பொறுப்பும்கூட என்றால் மிகையேது.

தமிழ் கத்தோலிக்க ஒன்றிய ஐக்கிய இராட்சியமானது பல்வேறு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் யாழ்ப்பாண புனித வளனார் அச்சக முகாமையாளரும் அருட்தந்தையுமான றொசானின் வேண்டுகோளுக்கு இணங்க. மதிப்புக்கும் வணக்கத்திற்கும் உரிய யாழ். ஆயர் ஊடாக அச்சுத் தேவைகளை மேம்படுத்துவதற்காக அச்சு உபகரணம் வாங்கக் கோரப்பட்டது. அதற்கிணங்க £2000 கொடுத்து உதவி இருந்தார்கள். அத்துடன் கடந்த முப்பது வருடங்களில் இம்முறையே (2017). ஆகக்கூடிய தொகையாக £25.400 இலண்டனிலிருந்து. இலங்கையின் நான்கு மறைமாவட்ட மக்களின் துயர் துடைப்பதற்காக. அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்களுடன் கைகோர்த்து நாமும் பயணிப்போம்.

**"அவர்களுள் எவரும் தமது உடமைகளை தம்முடையதாகக் கருதவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாக இருந்தது." - திருத்தூதர் பணி 432**

என்ற வேதாகம வார்த்தைகள் உங்களுக் கும் எனக்கும்தானே எழுதப்பட்டுள்ளது. மரஞ்செடி கொடி. பறவை. விலங்கு என்பதோடு. அறிவையும் ஆற்றலையும் எல்லோருக்கும் அனுபவிக்கக் கொடுக்காமல். எனக்கும் உனக்கும் கொடுத்தாரே நான் எனக்காக என் சொந்த உறவுகளுக்காக மட்டுப்படுத்துவது சரியா? முறையா? நியாயமா? சிந்திப்போம்!. சிந்திப்பதோடு நிற்காமல் செயற்படுவோம். உடலில் ஊனமில்லாமல் படைக்கப்பட்ட நாம் உள்ளத்தால் ஊனமாகுவது நியாயமாகுமா?

இன்றைக்குப் பல நிறுவனங்கள் பல பணிகளைச் செய்தாலும் சில நிறுவனங்கள் மட்டுமே அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. அந்த வகையில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக முத்திரையுடன் தம்மை அடையாளப் படுத்தியுள்ள இவர்களுடன் கரங்கோர்த்து நம்பிக்கையுடனும். அன்புடனும் பயணிக்கத் தயாராகுவோம்.

**"படித்தவன்மேல் பழியுமில்லை பசித்தவர் மேல் பாவம் இல்லை கிடைத்தவர்கள் பிரித்துக் கொண்டால் உழைத்தவர்கள் தெருவில் நில்லார்"**

என்ற கவிஞர் வாலியின் பாடல் வரிகளை வாழ்வோம். எமது வாழ்வையும் கல்வியால். பொருளாதாரத்தால். உடலால். உள்ளத்தால் வறுமைப்பட்ட ஏனையோரின். வாழ்வையும் உயர்த்துவோம்.

நான் என் தாயக மக்களை மறக்க முடியுமா? உதறித் தள்ள முடியுமா?

ஒரு பிள்ளையாவது பொறுப்பெடுப்போம்.

£15.00 மாதம் கொடுக்க முயற்சி எடுப்போம். அவ்வாறில்லாவிடில் மாதம் £2.00 ஆவது கொடுப்போம்.

**"இந்த நொடி கூடவே எமக்குச் சொந்தமல்ல. அந்த நொடிவரை அனைவரும்வாழ வாழ்ந்து காட்டுவோம்".**

## குடும்பங்களின் ஒற்றுமை

ஒரு குடும்பத்தின் வாழ்க்கை என்பது வாழ்க்கையின் மிகப்பெரிய ஆசீர்வாதம். குடும்பத்தின் ஒற்றுமை என்பது ஒரு வட்டம். இந்த வட்டம் விசுவாசத்தால் நிறையப்பட்டது மற்றும் கடவுள் வைத்திருக்கும் அன்பால் ஒன்றானது. குடும்பம் வந்து மரத்தின் கிளைகள் போல. அவர்கள் வெவ்வேறு திசையில் வளர கூடும். ஆனாலும் அவர்களின் வேர்கள் ஒன்றாகவே இருக்கும். "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக் தீமையை வெறுத்து. நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்." கடவுளின் வார்த்தையை கடைப்பிடித்து நாம் எம் குடும்பங்களை அன்பால் ஒற்றுமிப்போம். ஒற்றுமையான குடும்ப வாழ்க்கையே. அன்பால். பண்பால் மற்றும் பெருமையால் எதிர்காலத்தை பிரகாசமாக வெளிச்சமூட்டும். - ஜெமில்சன் ஜெயக்குமார் (Jemilsan Jeyakumar)

# Encourage children to Participate...

This article is to find a way to inspire the Tamil children attend Tamil mass more willingly. Children tend to go to English mass however I want to change that so I have validated some tips down below, these are purely my own experience and views…


Ø Priests could talk in a child-friendly manner so we can understand. eg. Homily-some children do not understand

Ø Using a few English words will help us understand.

Ø Priests should talk slowly so children can take time to process the information priests have said.


Ø Priests should make the duration of the mass shorter and make it understandable to everyone.

Youth
Yananshika Kumarathas



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர்




கிழக்கு மாகாண, திருகோணமலை மாவட்டத்தில் தனக்கென தனியிடம் பிடித்துக்கொண்டே பிரதேசமே 'கொட்டியாரம்' என்று வரலாற்றுக்கால முதலே அழைக்கப்படுகின்ற மூதூர் பிரதேசமாகும். இங்கு தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர்கள் என மூவினத்த வரும் வாழ்கின்றார்கள். மூதூர் என்பதற்கு இரு வகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அதன்படி மூதூர் என்றால் மூத்த அல்லது பழைய ஊர். அடுத்ததாக முத்துக்கள் விளைந்த ஊர். முன்னைய நாட்களில் முத்தெடுக்கும் தொழில் நடைபெற்றதாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. மூதூரில் முத்துக்கள் விளைந்ததை திருஞானசம்பந்தர் தனது தேவார பதிகத்தில் பின்வருமாறு கூறுகிறார்: "குரை கடலோதம் நித்திலம் கொலிக்கும் கோணமாமலை அமர்ந்தாரே." மாவலியாறு கடலோடு இரண்டு வழிகளில் (வெருகல், கங்கை) கலந்து கொட்டியாரக் குடாவுக்கு அழகு சேர்க்கிறது. மூதூர் பண்டைய ஈழத்தின் வாணிப துறைமுகமாக விளங்கியமைக்கான சான்றுகள் உள்ளன.

வரலாற்று ரீதியாக முஸ்லீம்கள் கண்டிய மன்னன் இரண்டாம் இராஜசிங்கனால் மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் இருந்து கொண்டு வரப்பட்டனர். அக்கால கட்டத்தில் மூதூர் 'வன்னியன் சகோதரர்கள்' கட்டுப்பாட்டில் இருந்தது. அவர்களுக்குள் ஏற்பட்ட அரசுரிமைப் போராட்டத்தின் காரணமாக தூத்துக்குடியிலிருந்து கத்தோலிக்க படை வீரர்களைத் திரட்டிக் கொண்டு கொட்டியாபுரத்திற்கு கண்டிமன்னன் வந்தான். 1638ல் கரையோரப் பிரதேசங்களை போத்துக்கீசரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். அந்த வேளையில் மூதூர்ப் பிரதேசம் கண்டிய மன்னன் 2ம் இராஜசிங்கனின் ஆட்சியின் கீழ் இருந்தது. 1669ல் றொபட் நொக்ஸ் எனும் இங்கிலாந்து மாலுமியும் அவன் பயணம் செய்த கப்பலும் புயலில் சிக்கி மூதூரில் கரைதட்டியது கரைதட்டியவர்கள் ஒரு புளிய மரத்தின்கீழ் இருந்து ஓய்வு எடுக்கும் போது கண்டிய மன்னனால் மூதூரில் சிறைப் பிடிக்கப்பட்டான். அதன் நினைவாக பின்னாளில் ஆங்கிலேயர் ஆட்சியின் போது அவ்விடம் நொக்ஸ் வீதி பெயரிடப்பட்டு இன்று வரை அவ்வாறே அழைக்கப்படுகின்றது. 1947ல் கொட்டியாபுரப் பற்று இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1952ற் பிற்பாடு கொட்டியாபுரப்பற்று மூதூர், சேருவில என இருபகுதிகளாக பிரிக்கப்பட்டது.

மூதூர் பங்கில் வாழ்ந்த வருகின்ற கத்தோலிக்கரின் வரலாறானது தொன்மை வாய்ந்தது. அங்கு வாழ்கின்ற கத்தோலிக்கர் இலங்கையின் திருத்தூதரும், புனிதருமாகிய ஜோசப் வாஸ் அடிகளாரின் காலத்திற்கு முன்னதாக இருந்தே அங்கே வாழ்ந்து வருகின்றார்கள் என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் காணக் கிடக்கின்றன. இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்கு மேற்பட்ட கால முதலே அங்கு கத்தோலிக்கரின் பிரசன்னம் காணப்படுகின்றது. மூதூருக்கு முதலில் வந்தவர் அருட்தந்தை கர்வாலியோ ஆவார். அவர் காலத்திலேயே பழைய கோவிலடியில் (இன்றைய மிகேல் டீ மெலோ கல்லறை வளவு) கத்தோலிக்க விசுவாசிகள் காணப்பட்டனர். மூதூரில் கத்தோலிருக்கான முதல் ஆலயம் அமைக்கப்பட்ட காலப்பகுதியாக 1693 - 1696 கருதப்படுகின்றது. தூய ஜோசப்வாஸ் இவ்வாலயத்தை அமைத்தார். மூதூர் புனித ஜோசப் வாஸின் புண்ணிய பாதம்பட்ட பூமியாகும். 1706ம் ஆண்டில் தூய ஜோசப்வாஸ் கூடவே தமிழ், சிங்கள கத்தோலிக்க இலக்கிய மேதை வண யாகோமே கொன்சால் வஸ் அடிகளாரும் இப்பயணத்தின் போது மூதூருக்கு வருகை தந்திருந்தார். இன்றுகூட புனித ஜோசப்வாஸ் காலத்தில் இந்தியாவிருந்து மறைபணியாற்ற வந்த அவரது வண மிகேல் டீ மெல் லோவின் கல்லறை மூதூரில் காணப்படுகின்றது. அங்கு மக்கள் வழிபாட்டுக்காக வாரவாரம் கூடுகின்றார்கள். பழைய ஆலயமானது பல்வேறு காலங்களில் மீளவும் கட்டப்பட்டது.

ஆயினும் 1865ம் ஆண்டில் அமமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்திரு மஸ்சியே அடிகள் இன்றைய ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஆலயத்தையும் அதனோடிணைந்து பிள்ளைகளின் கல்விக்கான ஆரம்பப்பாடசாலையும் ஆரம்பித்து அரும்பணியாற்றினார். இவரைத் தொடர்ந்து 1912ம் ஆண்டில் யேசு சபையைச் சேர்ந்த அருட்தந்தை சாள்ஸ் பொனல் அடிகளார் மூதூர்ப் பங்கின் முதற் பங்குத் தந்தையாக நியமனம் பெற்றார். இவர் ஆன்மீகப்பணியோடு கல்விப் பணியிலும் அதிக அக்கறை செலுத்தினார். இவரது காலத்திலேயே பச்சனூரில் இன்றைய இருதயபுரத்தில் திருஇருதய ஆண்டவருக்கு ஓர் ஆலயமும் அத்துடன் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த 2012ம் ஆண்டில் தனிப்பங்காகி நூற்றாண்டு நிறைவையும் மூதூர் பங்கு கண்டுகொண்டது. (தொடரும்)

**அருட்பணி**
**அ. அ. நவரெத்தினம்**
**(நவாஜி)**
**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கிறிஸ்தவத் துறை,**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப்பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**

**இளையோர் அறிய இதழிக்கோர் கத்தோலிக்க மணம் கமழும் ஊர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A BRIEF HISTORY - THE ROMAN CATHOL

The Shrine of Our Lady at Walsingham was established in 1061 when, according to the text of the Pynson Ballad (c 1485), Richeldis de Faverches prayed that she might undertake some special work in honour of Our Lady. In answer to her prayer, the Virgin Mary led her in spirit to Nazareth, showed her the house where the Annunciation occurred, and asked her to build a replica in Walsingham to serve as a perpetual memorial of the Annunciation.

This Holy House was built and a religious community took charge of the foundation. Although we have very little historical material from this period, we know that with papal approval the Augustinian Canons built a Priory (c 1150). Walsingham became one of the greatest Shrines in Medieval Christendom.

AFTER THE REFORMATION



In 1538, the Reformation caused the Priory property to King's Commissioners and the famous statue of Our Lac taken to London and burnt. Nothing remains today of the ori is marked on the lawn in "The Abbey Grounds" in the villag

After the destruction of the Shrine, Walsingham ceased to b Devotion was necessarily in secret until after Catholic Ema public expressions of faith were allowed.

THE CHAPEL IS RESTORED

In 1896 Charlotte Pearson Boyd purchased the 14th centu last of the wayside chapels en-route to Walsingham, and use.

In 1897 by rescript of Pope Leo XIII, the sanctuary of Ou was restored with the building of a Holy House as the Lady Church of the Annunciation, King's Lynn.

PILGRIMAGES BEGIN AGAIN IN 1897

The Guild of Our Lady of Ransom, brought the first Walsingham on 20th August 1897. Visits to the Slippe frequent, and as the years passed devotion and the number o

THE NATIONAL SHRINE OF OUR LADY FOR ROM ENGLAND

On 19th August 1934, Cardinal Bourne and Bishop La Bishops of England and Wales, together with 10,000 Chapel. At this pilgrimage, the Slipper Chapel was declared t of Our Lady for Roman Catholics in England.

DURING THE WAR YEARS

Walsingham was a restricted zone and closed to visitors, but many service men and women showed interest in the Shrine. On May 17th 1945, the American Forces organised the first Mass in the Priory grounds since the Reformation.

THE FIRST STUDENT CROSS PILGRIMAGE

This and the great Cross Carrying Pilgrimage for Peace, Penance and Prayer in 1948 began traditions that continue today. Each year Student Cross still walk to the Shrine during Holy Week.

Between 1968 and 2015 the Marist Fathers had the care of the shrine and, with the Marist Sisters and others, were responsible for the ministry to pilgrims.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOLIC NATIONAL SHRINE, WALSINGHAM

rty to be handed over to the )ur Lady of Walsingham was the original shrine, but its site village.

ed to be a place of pilgrimage. c Emancipation (1829) when

n century Slipper Chapel, the n, and restored it for Catholic

of Our Lady of Walsingham Lady Chapel of the Catholic

ne first public pilgrimage to Slipper Chapel became more nber of pilgrimages increased.

ROMAN CATHOLICS IN

op Lawrence Youens led the 0,000 pilgrims to the Slipper ared to be the National Shrine


With the appointment of the last Marist Shrine Director, Rt. Rev Alan Williams SM as Bishop of Brentwood, the Society was unable to provide a successor and Cardinal Vincent Nichols and the Bishop's Conference of England and Wales appointed Monsignor John Armitage as Rector of the National Shrine. The Marist Sisters and various secular priests continue their ministry at the Shrine

THE SLIPPER CHAPEL STATUE GOES TO WEMBLEY

During the Visit of Pope John Paul II to England in 1982, the Slipper Chapel Statue was taken to Wembley Stadium and was carried around the stadium prior to the Papal Mass preceded by The Director of the Roman Catholic Shrine (Fr Clive Birch sm) and the Administrator of the Anglican Shrine (Rev Christopher Colven).

MORE MODERN DEVELOPMENTS

The Shop, cafe and offices at the Shrine were de veloped in 1988. Later developments have improved the facilities, and although the Mass intentions office remains in the cloister, the cloister area itselfhas become a temporary Candle Sanctuary, and the provision for Holy Water is now to the right side of the Shrine grounds beneath the trees. ▶



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

With the appointment of Mgr Armitage, a ten million pound Development Appeal was announced. For information about this see the Appeal section of the web-site.

## THE ANNUNCIATION WINDOW

In 1997 there were celebrations to mark the centenary of the first post-reformation pilgrimage which took place on 20th August 1897. One of the lasting legacies of the centenary celebrations is the Annunciation Window in the Slipper Chapel which was a gift of the Guild of Our Lady of Ransom, whose forebears had organised the 1897 pilgrimage. The affairs of the Guild are now administered from the Offices of the National Shrine

## PILGRIMAGES TODAY

The Shrine now attracts some 150,000 pilgrims during the pilgrimage season with about 35 Major Pilgrimages from Catholic, Diocesan or Ethnic groups and Catholic Societies or Associations as well as many Parish and Overseas groups. At present our largest Pilgrimages are those of the Tamil community who come each May (c.6,000) and again in July with about 15,000 pilgrims, some being Christian and some Hindu in faith. The Syro-Malabar community bring about 5,000 pilgrims on their National Pilgrimage in July

## THE BASILICA OF OUR LADY OF WALSINGHAM

On the Feast of the Holy Family, 2015, during Pontifical Mass in the Chapel of Our Lady of Reconciliation at the Shrine, Bishop Alan Hopes read out a document from the Vatican, stating that Pope Francis was pleased to confer the title of Minor Basilica on the Shrine. There are only three sites with that title in England, the other two being St Chad's Cathedral in Birmingham and Downside Abbey Church.

## THE RC PARISH CHURCH OF THE ANNUNCIATION

In April 2005 the local RC Parish Church of the Annunciation (a 1950's temporary structure) in Walsingham village was demolished, and a beautiful new Church with twice the capacity built on the site. Because of its use by pilgrims resident at Elmham House, the Roman Catholic accommodation, the Shrine was instrumental in raising a great deal of the £1,345,000 needed for this project. The Church was consecrated by Bishop Michael Evans of East Anglia on 24th March 2006, and the Tower Sculpture was blessed by his successor Bishop Alan Hopes on May 4th 2017 marking the completion of the project.

## வேர்ச்சஞ்சிகை பற்றிய விமர்சனக் கண்ணோட்டக் களப்பக்கம்




மார்கழி மாத வேர்ச்சஞ்சிகை பற்றிய எங்கள் ஆட்சேபனை. கத்தோலிக்க மதம் என்பது அன்பைக் குறிக்கிறது. அந்த அன்பைச் சார்ந்த பத்திரிகைகள் அபரீவிதமான வார்த்தைகளை பயன்படுத்தி மற்றவர் மனங்களை நோகடிப்பது பத்திரிகைக்கு அழகல்ல.

(பக்13ல் அதிகார துஷ்ஸ்பிரயோகம்) நிர்வாக உறுப்பினர்களாக பணிபுரிவது சுகமான காரியமல்ல. அவர்களது தொழில் இந்நாட்டில் மிகமுக்கியம். இருப்பினும் தங்கள் நேரம். குடும்பம். பயணநேரம். பெற்றோல் இவை எல்லாம் செலவழித்து தங்களை அர்ப்பணித்து கடவுளுக்கென பணியைச் செய்து வருபவர்களை மதிப்பதற்கு பதிலாக அவமதிப்பது பெரியதொரு குற்றமாகும். மற்றும் இவ்வகையான உங்கள் எண்ணங்களை தெரிவிப்பவார்கள் உங்கள் பெயரைக் குறிப்பிட வேண்டுமே தவிர பணியக மக்கள் எனக் குறிப்பிடுவது கண்டிக்கத்தக்கது சிந்தியுங்கள் செயலாற்றுங்கள். நன்றி!

**- விமல்**

**வேர் மரமாக உரமான உங்களையும் உள்ளத்தில் நன்றியுடன் நினைத்து...**

எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எழுத்தாளர்கள், பெருந்தகைகள் ஆலோசகர்களாக அனைவருக்கும் நன்றி. இச்சஞ்சிகையை தரமாக்குவதற்கு ஒத்துழைத்த மதிப்புக்குரிய ஆய்வாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி. மற்றும் இச்சஞ்சிகைக்கு ஒத்துழைத்த. அனைத்து இல்லாளர்களுக்கும் மனமார்ந்த நன்றி. இவை அனைத்தையும் ஆக்கமாக்க, அருள்பாலித்த ஆண்டவனின் பாதங்களைப் பணிந்து. எல்லாப் புகழும் அவனுக்கே என நன்றியுடன் காணிக்கையாக்குகிறோம்.


**- வேர்க்குழு இலண்டன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Holy water - A means of spiritual wealth

Holy Water is a Sacramental that remits venial sin, Because of the blessing attached to it, Holy Church strongly urges its use upon Her children, especially when dangers threaten, such as fire, sickness and calamities. Every Catholic home should have always in it a supply of Holy Water.

**WE DO NOT TAKE ADVANTAGE OF THE BENEFITS DERIVED FROM HOLY WATER**



**LET US CULTIVATE FROM ITS USE**

Untold spiritual wealth is concentrated in a tiny drop of blessed water.

**AND WE GIVE IT SO LITTLE THOUGHT**

Did we realise now, as we shall realise after death the many benefits which may be derived from Holy Water, we would use it far more frequently, and with greater faith and reverence? Holy Waters has its great power and efficacy from the prayers of the Church which its Divine Founder always accept with complacency.

These are some of the petitions the Priest makes to God when he blesses water.

O God - grant that this creature of Thine (water) may be endowed with divine grace to drive away evils and to cast out diseases, that whatever in the house or possession of the faithful may be sprinkled by this water, may be freed from everything unclean, and delivered from what is hurtful. Let everything that threatens the safety or peace of the dwellers therein be banished by the sprinkling of the water, so that health which they seek by calling upon Thy Holy Name be guarded from all assault.

**THE HOLY SOULS LONG FOR IT**

Only in Purgatory can one understand how ardently a poor soul longs for Holy Water. If we desire to make a host of intercessors for ourselves, let us try to realise no some of their yearnings, and never forget them at Holy Water font. The holy souls nearest to heaven may need the sprinkling of only one drop to release their pining souls.

**REMITS VENIAL SINS**

Because Holy Water is one of the Church's sacramentals, it remits venial sin. Keep your soul beautifully pure in God's sight by making the sign of the cross carefully while saying:

"By this Holy Water and by Thy precious blood wash away all my sins, O Lord."

Thomas O' Leary
Bishop of Springfield.

**PRAYERS EFFECTIVE**

These prayers ascend to heaven each tie you take Holy Water and sprinkle a drop either for yourself or for another, whether he be present or absent and God's blessings descend for soul and body.

**DISPEL THE DEVIL**

The devil hates Holy Water because of its power over him. He cannot long abide in a place or near a person that is often sprinkled with this blessed water.

**ARE YOUR DEAR ONES LIVING AT A DISTANCE?**

Holy Water sprinkled with faith and piety, can move the Sacred Heart to bless your loved ones and protect them from all harm of soul and body.When worry and fear take possessions of your hear hasten to your Holy Water font, and give your dear ones the benefit of the Church's prayer ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் தமிழ் ஆன்மிகப் பணியகம் நாடாத்தும் விவிலியப் புதிர்

# விவிலியப் புதிர் போட்டி இல: 02

**பழைய ஏற்பாடு**

1. மனித படைப்பின் மாண்பு என்ன?

2. கடவுள் தாம் படைத்த ஆதாம் ஏவாளை எங்கே வைத்தார் ?

3. ஆதாம் என்ற வார்த்தையின் பொருள் என்ன?

4. கடவுள் ஏவாளை எவ்வாறு உரு வாக்கினார்?

5. நன்மை தீமை அறியக்கூடிய மரத் தின் கனியை உண்ட பின்பு அவர் களுக்கு நடந்தது என்ன ?

6. கடவுள் ஆதாம் ஏவாளை பாவத்தில் இருந்து மீட்பார் என்று வாக்களித்தாரா?

7. கடவுளின் கட்டளையை முதன்முத லில் கீழ்ப்படியாதது யார்?

8. காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்றது ஏன்?

9. ஆண்டவர் காயினுக்கு என்ன தண் டனை கொடுத்தார் ?

10. காயினின் மகன் பெயர் என்ன ?

**புதிய ஏற்பாடு**

1. மத்தேயு நற்செய்தியின் சிறப்பு என்ன?

2. இந்நற்செய்தியை மத்தேயு எப்போது எழுதினார்?

3. இயேசுவின் முதாதையர் பட்டியலில் 4 பெண்களின் பெயர்களை மத்தேயு குறிக்கிடக் காரணம் ஏதேனும் உண்டா?

4. மரியாவின் கணவர் சூசையை (யோசேப்பு) மத்தேயு எவ்வாறு வர் ணிக்கின்றார்?

5. கிறிஸ்து இம்மானுவேல் என்பதை முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?

6. இம்மானுவேல் என்பதன் பொருள் என்ன?

7. ஏரோது அரசன் அஞ்சியது ஏன்?

8. ஞானிகள் இயேசுவுக்கு காணிக்கை யாக அளித்தது என்ன?

9. குழந்தை இயேசுவையும், அவர் தாய் மரியாவையும் யோசேப்பு எங்கே கூட்டிச் சென்றார்?

10. அவர்கள் எகிப்தில் எவ்வளவு காலம் தங்கியிருந்தார்கள்?

**Address**
Bible Question
Tamil catholic chaplincy
304 Garratt Lane
Earls Field
SW18 4EH

**பரிசுகள் வழங்குபவர்**
திருமதி Noieline Bala
திரு Jude Ignasious

**தொகுப்பு**: திருமதி Noieline Bala

## விவிலியப் புதிர் 01க்கான சரியான விடைகள்

**பழைய ஏற்பாடு**

1. பழைய ஏற்பாடு என்றால் என்ன? - **கிறிஸ்து வருவதற்குமுன் எழுதப்பட்ட விவிலிய நூல்கள்**

2. பழைய ஏற்பாட்டில் உள்ள மொத்த நூல் கள் எத்தனை? - **46**

3. பழைய ஏற்பாட்டு மொத்த நூல்கள் எப்பொழுது எழுதப்பட்டன? - **கி.மு. 1500க்கும் கி.மு.63க்கும் இடையில்**

4. பழைய ஏற்பாட்டின் முதல் நூல் எது ? - **தொடக்க நூல்**

5. தொடக்க நூலின் ஆசிரியர் யார் ? - **மோயீசனின் பெயரில் உள்ளது**

6. பழைய ஏற்பாட்டின் கடைசி நூல் எது ? - **2 மக்கபேயர்**

7. 2 மக்கபேயர் என்னும் நூலின் ஆசிரியர் யார் ? - **சீரேனைச் சேர்ந்த யாசோன் கிரேக்க மொழியில் ஐந்து தொகுதிகளில் விரிவாக எழுதிய வரலாற்றினை சுருக்க மாக ஓர் ஆசிரியர் எழுதினார் எனக் கருதப் படுகிறது.**

8. பழைய ஏற்பாடு எந்த மொழியில் எழுதப் பட்டது ? - **எபிரேய மொழியில்**

9. பழைய ஏற்பாட்டு நூல்கள் எப்படி பிரிக் கப்பட்டுள்ளது? - **பெந்ததேயூக் (Pentateuch), வரலாற்று நூல்கள் (Histirical Books), ஞானாகம நூல்கள் (Wisdom Books), இறைவாக்கினரின் நூல்கள் (Books of Prophets), விவிலியத்தை அறி வோம்.**

10. கடவுள் முதல்நாளில் எதைப் படைத்தார் ? - **ஒளி**

**புதிய ஏற்பாடு :**

1. புதிய ஏற்பாடு என்பது என்ன? - **இயே சுக் கிறிஸ்துவின் வருகைக்குப் பிறகு எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பாகும்.**

2. புதிய ஏற்பாட்டில் உள்ள மொத்த நூல் கள் எத்தனை? - **27**

3. புதிய ஏற்பாடு நூல்கள் யாவை? - **நற் செய்திகள், திருத்துதர் பணி (அப்போஸ் தலர் பணி), புனித சின்னப்பரின் 13 திரு முகங்கள், மற்ற சீடர்களின் 8 திருமுகங் கள், திருவெளிப்பாடு**

4. புதிய ஏற்பாடு எப்போது எழுதப்பட்டது? - **கி.பி 46க்கும் கி.பி 100க்கும் இடைக் காலங்களில்**

5. இவ் 27 நூல்களையும் தொகுத்தளித்த வர் யார்? - **ஆபிரிக்க ஆயர்களின் உத வியினால் புனித அகுஸ்தினார் தொகுத் தளித்தார்.**

6. புதிய ஏற்பாட்டு நூல்களின் ஆசிரியர் கள் யாவர்? - **புனித மத்தேயு , புனித மாற்கு, புனித லூர்க்காஸ், புனித அருளப்பர் (புனித யோவான்), புனித சின்னப்பர், புனித இராயப்பர் (பேதுரு), புனித யாக் கோப்பு, புனித யூதா.**

7. புனித பவுலடியார் எழுதிய திருமுகங் கள் எத்தனை? அவை யாவை? - **13 திருமுகங்கள், 1) உரோமையர், 2) 1 கொரிந்தியர், 3) 2 கொரிந்தியர், 4) கலாத் தியர், 5) எபேசியர், 6) பிலிப்பியர், 7) கொலோசேயர், 8) பிலமோன், 9) 1தெச லோனிகர், 10) 2 தெசலோனிகர், 11) 1 திமோத்தேயு, 12) 2 திமோத்தேயு, 13) தீத்து**

8. புதுத் திருமுகங்கள் எனப்படுபவை யாவை? - **எபிரேயர், யாகப்பர், 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா.**

9. ஆக மொத்தம் எத்தனை நூல்கள்? - **8**

10. மத்தேயு நற்செய்தி யாருக்காக எழுதப் பட்டது? - **யூதருக்காக (முன்னுரை).**

முதலாம் பரிசு £25.00 பெறுபவர் **Josephine Alosoious**. பங்குபற்றி பரிசு பெறுபவருக்கு ஆண்டவர் யேசுவின் ஆசீர்வாதத்துடன் வாழ்த்துக்கள்.

**Josephine Alosious, 94 Silvermere Rd, LEWISHAM, London 5E6 4QS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மறை மாவட்ட புனித மரியாள் பேராலயம்

ஆசியாவின் இந்து சமுத்திரத்தின் முத்தாம் இலங்கைத் திருநாட்டின் கிழக்குக் கரையின் வாவியிலே மீன்பாடும் தேன்நாடு என வர்ணிக்கப்படும் இயற்கை எழில் கொஞ்சும் மட்டு மாநகரின் மத்தியிலே எழுந்தருளி தன்னை நாடி வருவோருக்காக தன் திருக் குமாரன் இறைஇயேசுவிடம் பரிந்து பேசி பல கோடி புதுமைகளால் அருள் பாலித்துக் காத்து வருகின்றாள் அன்னை மரியாள்.

இறையாட்சி இம்மண்ணிலே போர்த்துக்கே யரின் வருகையினால் கி.பி 1505 தொடக் கம் விருட்சமாக வியாபித்து வளர ஆரம்பித் தது. அதன் பேறாக 1808ம் ஆண்டு அன்னை மரியாளுக்காய் புளியந்தீவிலே ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு இந்தியாவின் கோவா மறை மாநிலத்தின் கீழ் இருந்து பரிபாலிக்கப்படலாயிற்று. இலங்கை தனி மறை மாநிலமாக உருவாக்கப்பட்டு அதன் கீழும் அதன் பின்னர் யாழ்ப்பாண மறை மாநிலத்தின் கீழும் பின் மட்டக்களப்பு - திருகோணமலை மறை மாநிலத்தின் கீழ் இணைப் பேராலயமாகவும் இருந்து இனிதே பணியாற்றிக் கொண்டு வந்தது எமது புனித மரியன்னையின் பேராலயம் ஆகும்.

2012 யூலை 03ம் திகதி மட்டக்களப்பு மறை மாவட்டம் தனி மறைமாவட்டமாக உருவாக் கப்பட்டதைத் தொடர்ந்து அதன் முதல் ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி யோசேப் பொன்னையா ஆண்டகையின் கீழ் 2012ம் ஆண்டு புனித மரியாள் பேராலயமாக பிர கடனப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று ஆயரின் நேரடித் தலைமையின் கீழ் பங்குத்தந்தையாக அருட்தந்தை C.V. அன்னதாஸ் அடிகளாருடன் உதவிப் பங் குத் தந்தையாக அருட்தந்தை லோய்ட் அன்ரனி அடிகளாருடனும் ஏறத்தாழ 500 குடும்பங்களுடனும் பங்கு மேய்ப்புப் பணிச் சபையுடன் அனைத்து பக்திச் சபைகளும் இணைந்து சிறப்பாக பணியாற்றிக் கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் தவக்காலத்திலே ஆலய முன்றலிலே காண்பிக்கப்படுகின்ற இயேசுவின் பாஸ்கா திருக்காட்சி நிகழ்ச்சி இப்பிரதேசத்திலே பிரபல்யம் பெற்றதொன்றா கும். மறையறிவு போட்டிகளூடாக தேசிய மட்ட சாதனையாளர்களாக இப்பங்கு மாண வர்கள் முன்னிலை பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆகவே நாமும் புனித மரியாள் பேராலயத் தினூடாக அன்னையின் ஆசி பெற அவள் பரிந்துரைக்காக செபம் செய்வோம்.

## அறிய வேண்டியவை

**யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள்**



"தமிழ் சைவம் இரண்டும் என் இரு கண்கள் அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன் அவை வாழப் பணி புரிவதே என் வாழ்வின் குறிக்கோள்", என வாழ்ந்தவர் தவத்திரு ஆறுமுக நாவலரவர்கள். விவிலிய நூலுக்குச் சிறந்த மொழிப்பெயர்ப்பு செய்தது. திருக்குறள் பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தது. பெரிய புராண வசனம் எழுதியது அவருடைய பெருமைக்குச் சான்று பகர்வன.

**ஜோன் போஸ்கோ**



ஜோன் போஸ்கோ ஓர் இத்தாலிய உரோமன் கத்தோலிக்கக் குருவும், கல்வியாளரும், 19ஆம் நூற்றாண்டின் எழுத்தாளரும் ஆவார். இவர் தன் வாழ்நாளெல்லாம் ஏழை எளியவர்களின் பிள்ளைகளுக்கும், தெருவில் அலைந்து திரிந்த இளையோரின் முன்னேற்றத்திற்கும் உழைத்தார். இவர் இத்தகையோரின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார். தண்டனை சார்ந்த கல்வி முறையை விடுத்து அன்பு சார்ந்த கல்வி முறையைப் பின்பற்றினார்.

## கவனிக்க

விவிலிய புதிர் போட்டியில் சரியான விடை களை அனுப்புபவர்களில் இருந்து குலுக்கல் முறையில் மூவர் தெரிவு செய்யப்பட்டு,

முதலாம் பரிசு - £ 25 பவுண்ஸ்
இரண்டாம் பரிசு - £ 15 பவுண்ஸ்
மூன்றாம் பரிசு - £ 10 பவுண்ஸ்

என வெற்றி பெறுபவருக்கு உரிய பரிசு அனுப்பி வைக்கப்படும்.

உங்கள் பெயருடன் முகவரியை குறிப்பிட மறவாதீர்கள் ஏனைய திறமைசாலிகளின் பெயர்களும் வேர்கள் சஞ்சிகையில் பிரசுரிக் கப்படும்.

**புதிர் போட்டிக்கான உங்கள் விடைகளை 31-05-2018க்கு முன்னர் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.**




நீர் இளைஞராயிருப்பதால் உம்மை யாரும் அவமதியாதிருக்கட்டும். சொல், நடத்தை, அன்பு, விசுவாசம், தூய்மை முதலியவற்றில் நீர் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாக விளங்கும். - 1 தீமோ 4:12

Let no one have contempt for your youth, but set an example for those who believe, in speech, conduct, love, faith, and purity. - 1 Timothy 4:12

## பொருட்செல்வத்தைத் தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

**கடந்த சஞ்சிகையின் தொடர்ச்சி...**

மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண் டும்?

எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடு வேண்டும்.

நாம் மனித மாண்பை மதிக்க வேண்டும். எமது உடல், அறிவு, ஆன்மா என்பவை புனிதமானவை என்பதையினை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப்பாதுகாக்க வேண் டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண் போடு நடத்த வேண்டும்.

இந்த நுகர்வுக் கலாசாரத்தால் நாம் தொலைத்து விட்ட கொடைகள், ஆசீர்வாதங் களை மீளக் கண்டுபிடிக்க வேண்டும். குறிப் பாக குடும்ப உறவுகளை நன்கு பேண வேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழ வேண்டும்.

சமூக, சகோதர உதவிகளில் குறிப்பாக போரி னால் பாதிக்கப்பட்டோரின் நல்வாழ்வின் உயர்ச்சிக்காக தன்னலமற்ற சேவைகளில் ஈடுபட வேண்டும். தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்தனையோ எடுகோள்கள் வரலாற் றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.

– அருட்பணி மா.றெஜிஸ் இராசநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Bishop's House,*
*P O Box No. 02,*
*Jaffna, Sri Lanka*
*poompuhar@hotmail.com*
*00947506662755*

*Dear Friends,*



And so here I am at last in my home diocese of Jaffna beginning a new phase in my ministry. It is already five weeks and before I get down to serious business, I wanted to write these few lines to say how deeply appreciative I am of all of your very friendly and generous assistance and support over the years of my ministry there among you in London.

I had been visiting Jaffna almost every other year and I am well aware of the changes that have taken place over the past 30 years. I am again assigned the same Parish I served before I came to London in 1987. The people were driven out 28 years ago and the entire area had since been out of bounds for the civilians. When finally under pressure from the UN, they were allowed to go back. There are no houses or landmark institutions for the people to locate their own land and property. They are returning literally to an area of utter desolation with no churches, convents, schools, and other institutions for the people who themselves have to start from the scratch.

The Palaly Army Camp, the Airport and the KKS harbour are all located within the Parish boundaries. This explains why the security forces are reluctant to leave this area. The sections of land allowed for the people put together is less than one sixth of what they inhabited earlier. The rest has become the property of the security forces and is frustrating to see how they have developed these areas for themselves.

I am therefore embarking on a mission to rebuild and rehabilitate a whole community left devastated by the confiscation of land belong to our people. It appears so difficult and challenging for me when it is normally time to take matters easy at this age of what should be my retirement.

Taken at the purely human level, my return does not seem a wise one at all for a number of reasons, but having prayerfully discerned over the suggestion from my former parishioners and in consultation with the Bishop and senior Priests, I have accepted their encouraging welcome back to the Diocese.

My health, particularly my eyes are relatively in good order although I have age related ailments to contend with. Yet I hope to be able in some way to satisfy the aspirations of a people trying to re-claim and live in their traditional homes, community and environment holding on to their Catholic beliefs and culture. The task before me is enormous but I am confident and hopeful that the Divine Master will lead and guide me through in satisfying the aspirations of these people entrusted to me. Please do keep us in your prayers.

I thank every one of you sincerely once again, for all your friendship and support.

God be with you until we meet again By His counsels guide and uphold you With his sheep securely fold you God be with every one of you till we meet again.

Yours in Christ Jesus,

*(Rev. Fr. T.E.T. Rajan)*

தாயகம் திரும்பிய பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் முதலாவது இயக்குனரின் கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Wallingtion Mass Centre



ஒளிவிழாவில் கலந்து கொண்ட Southall இளையோர்



Lewisham Mass Centre

## பணியக நிகழ்வின் நிழல்கள்





MK Mass Centre









3 வது வருட முதியோர் ஒன்றுகூடல்



### பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

எலிசபேத் மகாராணி, தனது 92 ஆவது பிறந்த நாளை சித்திரை மாதம் 21ஆம் திகதி அவரது அரண்மனையில் கோலா கலமாகக் கொண்டாடினார், அவருக்கு நீண்ட ஆயுளும் பரிசுத்த ஆவியின் வரங் களும் கிடைக்க மன்றாடுவோம்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
08
09
1945



விண்ணில்
31
05
2014

**அமரர் றெஜினா நீக்கிலாப்பிள்ளை**

'உம் உயிர் கொடுத்து எமை வளர்த்தாய்
உம் அன்பு மொழியால் எமை பாசத்தில் வளர்த்தாய்
உம் புன்னகையால் எமக்கு மகிழ்வை ஊட்டினாய்
உம் கருணையாலே எமக்கு நேசத்தை காட்டினாய்
உம் வாழ்க்கையாலே எமக்கு புத்துயிர் ஊட்டினாய்
உமக்கென்று எதுவுமே நீ கொண்டதில்லை
உம் வாழ்நாளெளல்லாம் எமக்காய் வாழ்ந்தாய் அம்மா!
உம்மையே இழந்தோம் ஒரு நொடியில் நாம், அம்மா!
அம்மா, அம்மா, என்று அழைக்க எம் மனம் துடிக்குது
ஆம் என்று பதில் தர நீ இங்கு இல்லை அம்மா
எமை விட்டு நீர் சென்று நான்காண்டுகள் ஆனதே!
எத்தனை ஜென்மங்கள் போனாலும் உம் அன்பு
எமை விட்டு மாறாதம்மா!'
உம் ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய
இறைவனை வேண்டுகிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்குநரின் இதயத்திலிருந்து...



கிறிஸ்துவில் பிரியமான இறைமக்களே!

பரிசுத்த ஆவியானவர் வரும்போது நிறைஉண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் எனும் வார்த்தையில் உங்களை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

முன்னொருபோதும் இல்லாதளவு ஆவியானவரின் அருள் பொழிவு பூவுலகெங்கும் ஊற்றப்படுவதைக் கண்ணோக்கு கின்றோம் இதனால் அனேகர் இறைஅன்பினால் உந்தப்பட்டு இறைவார்த்தையில் தாகம் உள்ளவர்களாகவும் ஜெபத்தில் நிலைத்திருப்பவர்களாகவும் மாறுவது ஆனந்தம் தருகின்றது.

இங்கிலாந்து ஆன்மீக பணிப்பொறுப்பை பெற்றிருக்கும் நான் இறை துணையைத்தான் மலைபோல நம்பி உள்ளேன். சிறியவனாக இருந்தும் பிரமாணிக்கம் உடையவன் என்று கருதி இறைவன் தந்த இப்பணியை கனத்தடனும் நம்பிக்கை யுடனும் நடாத்த உங்கள் ஜெப உதவியை நாடி நிற்கின்றேன்.

வேர்கள் - புலம்பெயர் கத்தோலிக்க தமிழ் இலக்கிய நாற்று மேடை. இதை வலுவுள்ள தாக்கும் திறன் உங்கள் விரல் நுனிகளில் புதைந்துள்ளது. வரும் காலங்களில் இதனை இன்னும் உயிர்த்துடிப்புள்ளதாக்கும் முயற்சிகளில் இறங்க உள்ளோம். இளையோர்களே உங்களிடம் இருந்து அதிகமானவற்றை எதிர்பார்க்கின்றோம்.

இறையாசீர் உங்கள் அனைவருடனும் இருப்பதாக!

**– அருட்பணி ஜெ. எல்மோ அருள்நேசன்**

## ஆசிரியர் உள்ளத்திலிருந்து...



வேர்கள் எமது பிரித்தானிய தமிழ் கத்தோலிக்க மக்களின் உறுதியான குரலாகவும், பைந்தமிழால் எமது தாயகத்துடன் பாலம் அமைக்க வேண்டும் என்பதும் எமது விருப்மாகும்.

மாற்றம் என்பது மிகவும் கடினமானது. ஆனால் அது புதியோருக்கு சந்தர்ப்பத்தை வழங்கும் அத்துடன் காலத்தின் தேவையுமாகும். இயக்குனர்கள், நிர்வாகிகள், ஆசிரியர்கள் மாறலாம் ஆனால் பிரித்தானிய தமிழ் ஆன்மீக பணியக மக்களின் ஒற்றுமையான பங்களிப்பு தொடரவேண்டியதாகும். ஆகவே வேர்கள் குழுவில் சேர்ந்து பணியாற்ற இயலுமானோர் எம்மை தொடர்புகொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

– க.நிமலன்



"வேர்கள்" 2017, கிறிஸ்மஸ் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வின் போது



போலந்து பயணம் - சித்திரை 2018



ஒளி விழா - மார்கழி 2017

Design & Layout by A.Bastian, Printed by Net Printers - UK

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org